# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முறையீட்டு மனு எண்: 1293 /16/பேரூ/

ஆணை எண்: 197/17/நாள்: 1.8.2017

திரு. C. ராஜவேலு,
14, பாலார் கார்டன், சத்துவாச்சாரி,
வேலூர் – 632 009. – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆலங்காயம் பேரூராட்சி மற்றும் பிறர். – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

முறையீட்டு மனுதாரர் திரு. C. ராஜவேலு என்பவரது முறையீட்டு மனு 15.12.16 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண். 1293/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் ஆலங்காயம் பேரூராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளதால் அவர்கள் மீது நடவடிக்கைக்கு உத்தரவிடுமாறு கோரப்பட்டுள்ளது.

மேற்படி முறையீட்டு மனு, பிற ஆவணங்கள் மற்றும் செயல் அலுவலரது அறிக்கை ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வில் அரசினால் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள முறையீடு 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தின் கீழ் இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணைக்குட்படுத்தப்பட உகந்ததல்ல எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 1-ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

4-8-17

4/8/17

பெறுநர்

1. திரு. C. ராஜவேலு,
14, பாலார் கார்டன், சத்துவாச்சாரி,
வேலூர் – 632 009.

2. செயல் அலுவலர்,
ஆலங்காயம் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.